M. K. Stalin
Chief Minister of Tamil Nadu

‘கேலோ இந்தியா’ விளையாட்டு போட்டிகளை தொடங்கி வைத்தார் பிரதமர் மோடி

‘சாம்பியன்களை உருவாக்கும் பூமி தமிழ்நாடு’ என பெருமிதம்

சென்னை, ஜன.20

சென்னை நேரு விளையாட்டு அரங்கில் நடந்த கோலாகல விழாவில் ‘கேலோ இந்தியா’ விளையாட்டு போட்டிகளை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். அப்போது சாம்பியன்களை உருவாக்கும் பூமி தமிழ்நாடு என்று பிரதமர் தெரிவித்தார்.

6வது ‘கேலோ இந்தியா’ இளைஞர் விளையாட்டு போட்டிகள் தமிழகத்தில் நடைபெறுகிறது.

18 வயதுக்கு உட்பட்டோருக்கான ‘கேலோ இந்தியா’ இளைஞர் விளையாட்டு போட்டிகள் சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் வருகிற 31ந் தேதி வரை 12 நாட்கள் நடைபெறுகிறது.

இந்த விளையாட்டு திருவிழாவில் தடகளம், கபடி, துப்பாக்கி சுடுதல், நீச்சல், கால்பந்து உள்பட 26 வகையான போட்டிகள் இடம்பெறுகின்றன.

இதில், 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 5,630 வீரர்–வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் நேற்று மாலை 6 மணிக்கு நடைபெற்ற பிரமாண்ட தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். விழாவுக்கு கவர்னர் ஆர்.என். ரவி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேலுநாச்சியார் சிலை பரிசு

மத்திய தகவல் ஒளிபரப்பு மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை, உள்துறை இணை அமைச்சர் நிசித் பிரமாணிக், மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு துறை, மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால் வளத்துறை இணை அமைச்சர் எல்.முருகன், தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

பிரதமர் மோடியை முதலமைச்சா மு.க.ஸ்டாலின் ‘உளி ஓவியங்கள்’ என்ற புத்தகத்தை வழங்கி வரவேற்றார்.

தேசிய கீதம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல்களுடன் விழா இனிதே தொடங்கியது. தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்கள் நினைவு பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டனர். பிரதமர் நரேந்திர மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ‘கேலோ இந்தியா’ விளையாட்டு லோகோவான வீரமங்கை வேலுநாச்சியாரின் உருவ சிலையை நினைவு பரிசாக வழங்கினார்.

தொடர்ந்து, கவர்னர் ஆர்.என். ரவி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர், மத்திய இணை அமைச்சர்கள் நிசித் பிரமாணிக், எல்.முருகன் ஆகியோருக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வீரமங்கை சிலையை நினைவு பரிசாக வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அனைவரையும் வரவேற்று பேசினார். பின்னர், பிரபல பாடகர்களின் வரவேற்பு பாடலுடன், பரதநாட்டிய கலைஞர்களின் ஆட்டம் கண்கவர் ஒளிஒலி அமைப்புடன் பிரமாண்டமாக நடைபெற்றது.

தொடர்ந்து, மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர் பேசினார். அதன்பின்னர், கேலோ இந்தியா ‘தீம்’ பாடல் மேடை நிகழ்ச்சி நடனத்துடன் நடத்தப்பட்டது. தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார். பின்னர், டி.டி. தமிழ் சேனல் ஒளிபரப்பை தொடங்கி வைத்து அதற்கான லட்சினையை (லோகோ) பிரதமர் நரேந்திர மோடி அறிமுகப்படுத்தியதுடன், 8 மாநிலங்களில் 12 ஆகாசவாணி பண்பலை ஒலிபரப்பு கோபுரங்களையும், ஜம்மு–காஷ்மீரில் 4 தூர்தர்ஷன் ஒளிபரப்பு கோபுரங்களுக்கான திட்டப்பணிகளையும் தொடங்கி வைத்து, 12 மாநிலங்களில் தொடங்கப்பட உள்ள 26 பண்பலை ஒலிபரப்பு கோபுரங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

ஜோதியை ஏற்றி வைத்தார்

இதையடுத்து ‘கேலோ இந்தியா’ போட்டிக்கான ஜோதியை டேபிள் டென்னிஸ் வீரர் சரத் கமல், தடகள வீராங்கனை சுபா ஆகியோர் கொண்டு வந்து பிரதமர் நரேந்திர மோடியிடம் வழங்கினர். ஜோதியை பெற்றுக்கொண்ட பிரதமர் நரேந்திர மோடி, அதை ஏற்றிவைத்து, போட்டியை முறைப்படி தொடங்கி வைத்தார். அந்த ஜோதி தமிழ் எழுத்தான ‘த’ வடிவில் இருந்தது.

தொடர்ந்து, பிரதமர் நரேந்திர மோடி சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர், “தமிழ்நாட்டுக்கு வந்தது சொந்த ஊருக்கு வந்ததுபோல் இருக்கிறது. விளையாட்டு துறையில் சாம்பியன்களை உருவாக்கும் பூமியாக தமிழ்நாடு விளங்குகிறது. இந்தியாவை புதிய உச்சத்துக்கு எடுத்துச்செல்லும் சக்தியாக நாட்டில் உள்ள இளையோர் விளங்குகின்றனர். ஒரே பாரதம், வலிமையான பாரதம் என்பதை போட்டியில் பங்கேற்ற வீரர், வீராங்கனைகள் காட்டுகின்றனர்.

2014ம் ஆண்டுக்கு பிறகு விளையாட்டு துறை மேம்பாடு அடைந்துள்ளது. திறமைக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து வருகிறோம்.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் இந்தியா பதக்கங்களை குவித்தது. பாரா ஒலிம்பிக்கிலும் பெரும் சாதனை படைத்தது. இந்திய விளையாட்டு துறையின் மதிப்பு ரூ.1 லட்சம் கோடியாக இருக்கும் என்று மதிப்பிடுகிறோம். விளையாட்டு துறையில் இந்தியா தலைசிறந்த நாடாக உயர விரும்புகிறோம்.

சிலம்பம் போட்டி

2036ம் ஆண்டு இந்தியாவில் ஒலிம்பிக் போட்டியை நடத்த முயற்சி மேற்கொண்டு வருகிறோம். தமிழ்நாட்டில் சிறப்பு வாய்ந்த விளையாட்டுகளில் சிலம்பமும் ஒன்று. அது ‘கேலோ இந்தியா’ போட்டியில் அறிமுகப்படுத்தப்பட்டது பாராட்டுக்குரியது என்றார்.

அதனைத் தொடர்ந்து, ‘கேலோ இந்தியா’ போட்டிக்கான ‘தீம்’ பாடல் இந்தியில் திரையிடப்பட்டது. தொடர்ந்து, அதேபாடல் தமிழில் நடனமாடி இசையமைத்து பாடப்பட்டது. இதில், பள்ளி மாணவ–மாணவிகளும் பங்கேற்று நடனமாடினர்.

பின்னர், தமிழ்நாட்டின் வீர தீர கலைகளான யோகா, மல்லர் கம்பம், வில்வித்தை, களரி, சிலம்பத்துடன் நடைபெற்ற கண்கவர் நடன நிகழ்ச்சி காண்போரை பரவசப்படுத்தியது. அத்துடன் விழா நிறைவடைந்தது.

விழாவில் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், சென்னை மேயர் பிரியா, தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா உள்பட அரசு அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள், பள்ளி மாணவ–மாணவிகள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

‘இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக தமிழ்நாட்டை நிலைநிறுத்துவதே குறிக்கோள்’

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜன.20

இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழ்நாட்டை நிலை நிறுத்துவதே குறிக்கோள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

‘கேலோ இந்தியா’ இளைஞர் விளையாட்டு போட்டியின் தொடக்க விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

எல்லாருக்கும், எல்லாம், அனைத்து துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி என்பதை உள்ளடக்கமாக கொண்ட திராவிட மாடல் ஆட்சியில், அனைத்து துறைகளிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக வளர உழைத்து வருகிறோம்.

ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்பது எப்படி நமது இலக்கோ, அதேபோல், இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழ்நாட்டை நிலைநிறுத்துவதும் நம் குறிக்கோள். இந்த இலக்கை நோக்கி பயணிக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை பாராட்டுகிறேன்.

தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு, சென்னை மாமல்லபுரத்தில் 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டி, ஏ.டி.பி சேலஞ்சர் போட்டி, சென்னை ஓபன் சேலஞ்சர் போட்டி, ஆடவர் ஆசிய சாம்பியன்ஸ் டிராபி 2023, ஸ்குவாஷ் உலக கோப்பை 2023, அலைச்சறுக்கு போட்டி, கிராண்ட் மாஸ்டர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டி ஆகியவை தமிழகத்தில் நடத்தி உள்ளோம்.

அதே நேரத்தில், விளையாட்டு கட்டமைப்புகளையும் உலக தரத்திற்கு உயர்த்தி வருகிறோம். இந்தியாவிலேயே முதல்முறையாக, பாரா வீரர்களுக்கு 6 விளையாட்டு அரங்கங்கள், ராமநாதபுரத்தில் ஒலிம்பிக் நீர் விளையாட்டு அரங்கம், சென்னை, மதுரை, திருச்சி மற்றும் நீலகிரியில் ஒலிம்பிக் அகாடமி, முதல் கட்டமாக 10 சட்டமன்ற தொகுதிகளில் மினி ஸ்டேடியம், புதிய மாவட்டங்களான தென்காசி, மயிலாடுதுறை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, ராணிப்பேட்டை, செங்கல்பட்டில் மாவட்ட விளையாட்டு மையங்கள் என்று பல்வேறு உள்கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம்

தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் ஜல்லிக்கட்டுக்கு, மதுரையில் ரூ.62 கோடியே 77 லட்சம் மதிப்பில் ‘கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல்’ அரங்கும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அந்த அரங்கத்தை வருகிற 24ந் தேதி நான் திறந்து வைக்கிறேன்.

தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையம், இந்த நேரு விளையாட்டு அரங்கத்தில் விரைவில் தொடங்கப்பட உள்ளது. மணிப்பூரில் நிலவும் பிரச்சினைகளால் அங்குள்ள விளையாட்டு வீரர்கள் பயிற்சிகள் மேற்கொள்வதற்கு, அவர்களை சகோதர உணர்வுடன் தமிழகத்திற்கு வரவேற்று திராவிட மாடல் அரசு பயிற்சி கொடுத்தது. அவர்களில், சிலர் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்கிறார்கள்.

‘கேலோ இந்தியா’ போட்டி தமிழகத்தில் நடைபெறுவது எங்களுக்கு கிடைத்த மகிழ்ச்சி. தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம், 'டேமோ' விளையாட்டாக இந்த முறை சேர்க்கப்பட்டுள்ளது.

‘கேலோ இந்தியா’ 2023 இலச்சினையில் வான்புகழ் திருவள்ளுர் சிலை இடம் பெற்றுள்ளது. அந்த சிலை கலைஞரால் இந்தியாவின் தென் முனையில் வான் உயர அமைக்கப்பட்டது. அதேபோல், ஆங்கிலேயே ஆதிக்கத்திற்கு எதிராக போராடிய வேலுநாச்சியார் சின்னமும் அதில் இடம் பெற்றுள்ளது நமக்கு கூடுதல் பெருமை.

உலக அரங்கில் கவனம் ஈர்க்கும் மாநிலம்

நாம் விளையாட்டை வளர்ச்சியின் இலக்காக கருதி செயல்பட்டு வருகிறோம். சுயமரியாதை மற்றும் தன்னம்பிக்கை மேம்படுத்தி, எல்லாருடைய நல் வாழ்விற்கும் விளையாட்டு உதவுகிறது. அன்பு பாலங்களையும், சமூக நல்லிணக்கத்தையும் உருவாக்கும் ஆற்றல் விளையாட்டிற்கு உண்டு. விளையாட்டு துறையிலும் தமிழ்நாட்டை உலக அரங்கில் கவனம் ஈர்க்கும் மாநிலமாக உயர்த்த வேண்டும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசின் அழைப்பை ஏற்று வருகை தந்துள்ள மோடிக்கு நன்றி. விளையாட்டில் பங்கேற்பதற்காக வருகை தந்துள்ள 5 ஆயிரத்துக்கும் அதிகமான வீரர்கள் வெற்றி பெற வாழ்த்துகிறேன் என்றார்.

முன்னதாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தன் பேச்சை தொடங்கு வதற்கு முன்பு, பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்களை ஆங்கிலத்தில் பேசி வரவேற்றது குறிப்பிடத்தக்கது.

In the Court of XIV Assistant City Civil Judge, Chennai
O.S. No 3097/23

CanaraBank
Represented by its Branch Manager, –Plaintiff
Vs
Kotteeswari and another –Defendants

To
D1 Kotteeswari
D2 B.Selvam
Both residing at
9/16B,MGR Nagar,Third street,
Velachery,Chennai-600042

Please take notice that in the above suit filed by the plaintiff to recover money, the Honourable XIV Assistant City Civil Judge has ordered summons to you by paper publication. The hearing of the case is on 5-3-2024 . Kindly make it convenient to attend the court on the day at 10.30 A.M failing which the matter will be decided in your absence.

V.Jayanandakumar, M.A., M.L.,
ADVOCATE

In the Court of XVIII Assistant City Civil Judge, Chennai
O.S. No. 2787/23

CanaraBank
Represented by its Branch Manager Plaintiff
Vs
Noorudin and another –Defendants

To
D1 Noor Uddin
D2 Abdur Rahman
Both residing at
39,Gangai Ammankoil street,
Vadapalani,Chennai-600 020

Please take notice that in the above suit filed by the plaintiff to recover money, the Honourable XVIII Assistant City Civil Judge has ordered summons to you by paper publication. The hearing of the case is on 19-2-2024. Kindly make it convenient to attend the court on the day at 10.30 A.M failing which the matter will be decided in your absence.

V.Jayanandakumar, M.A., M.L.,
ADVOCATE

In the Court of XVIII Assistant City Civil Judge, Chennai
I.A.No 3 of 2023 and
I.A.No 2 of 2023 in
O.S. No.6518/22

CanaraBank
Represented by its Branch Manager, –Plaintiff
Vs
R.Selvam and another –Defendants

To
D1 R.Selvam,
9/8,T.V.Colony,64th cross street,
10th sector,K.K.Nagar,
Chennai-6000078

Please take notice that in the above suit filed by the plaintiff to recover money, the Honourable XVIII Assistant City Civil Judge has ordered Notice to you by paper publication. The hearing of the case is on 22-2-2024 . Kindly make it convenient to attend the court on the day at 10.30 A.M failing which the matter will be decided in your absence.

V.Jayanandakumar, M.A., M.L.,
ADVOCATE

In the Court of XIV Assistant City Civil Judge, Chennai
O.S. No 3095/23

CanaraBank
Represented by its Branch Manager, Plaintiff
Vs
Manoharan and another –Defendants

To
D1 Manoharan
D2 Yuvaraj
Both residing at
50/51,S.M.V.Koil street,
Triplicane,Chennai-600075

Please take notice that in the above suit filed by the plaintiff to recover money, the Honourable XIV Assistant City Civil Judge has ordered summons to you by paper publication. The hearing of the case is on 15-3-2024. Kindly make it convenient to attend the court on the day at 10.30 A.M failing which the matter will be decided in your absence.

V.Jayanandakumar, M.A., M.L.,
ADVOCATE

IndiaShelter
Sabke Liye Ghar Ka Loan

இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 6வது மாடி, பிளாட்–15, செக்டார்–44, இன்ஸ்டிடியூஷனல் ஏரியா, குர்கான், ஹரியானா–122002
கிளை அலுவலகம்: Vee வளாகம், இரண்டாவது தளம், எண்.4/316, ஜிஎன்டி சாலை, எம்.ஏ.நகர், பாடியநல்லூர், ரெட்ஹில்ஸ், சென்னை, தமிழ்நாடு 600 052

கோரிக்கை அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(2) கீழ் அறிவிப்பு

இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (ISFCL) நிறுவனத்திடம் இருந்து கடன் பெற்ற பின்வரும் கடன்தாரர்கள் ISFCLக்கு தங்கள் கடனுக்கான சமமான தவணைகளை (EMIs) ISFCL க்கு செலுத்தத் தவறிவிட்டனர் மற்றும் நேஷனல் ஹவுசிங் பேங்க் வழங்கிய வழிகாட்டுதல்களின்படி அவர்களின் கடன் கணக்கு செயல்படாத சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடன்தாரர்(கள்) ISFCL க்கு அசையா சொத்துக்களை செக்யூரிட்டியாக வழங்கியுள்ளனர், அதன் விவரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன. கடனின் விவரங்கள் மற்றும் நிலுவையில் உள்ள தொகைகள் மற்றும் கடன்தாரர்கள் ISFCL க்கு தேதியின்படி செலுத்த வேண்டிய தொகைகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. கடன்தாரர் (கள்) மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், கீழ் கையொப்பமிடப்பட்டவர் ஈடுபெற்ற கடன் அளித்த ISFCLன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக இருப்பதால் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட கடன்தாரர்(கள்) மீது நடவடிக்கை எடுத்துள்ளார் மற்றும் இந்த சட்டத்தின் கீழ் அறிவிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் கடன்தாரர்(கள்) அவர்களின் பெயர்களுக்கு எதிராக சுட்டிக்காட்டப்பட்ட நிலுவைத் தொகையை அந்த அறிவிப்பு வெளியான 60 (அறுபது) நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தத் தவறினால், கீழே கையொப்பமிட்டவர், SARFAESI சட்டத்தின் பிரிவு–13, துணைப்பிரிவு (4)ன் கீழ் ஈடுபெற்ற கடன் அளித்தவருக்கு வழங்கப்பட்டுள்ள உடைமைகளை சுவாதீனம் எடுத்து விற்கும் அதிகாரம் உட்பட ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவார். கீழே உள்ள சொத்துக்களைக் கையாள வேண்டாம் என்று பொதுவாக பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உத்தரவாததாரர்/சட்ட வாரிசுதாரர்/சட்ட பிரதிநிதி பெயர், கடன் கணக்கு எண்.	என்பிஏ/ கோரிக்கை அறிவிப்பு தேதி	கோரிக்கை அறிவிப்பு மற்றும் தொகை	ஈடுபெற்ற சொத்துக்களின் விவரம் (அசையா சொத்துக்கள்)
1	1. கல்பனா P, பிரகாஷ் J கடன் கணக்கு எண். HL11CHLONS000005054728	10 ஜனவரி 2024 மற்றும் 10 ஜனவரி 2024	10.01.2024 அன்று நிலுவையில் உள்ள ரூ. 563915 (ரூபாய் ஐந்து லட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து பதினைந்து மட்டும்) மற்றும் 11.01.2024 முதல் வட்டி மற்றும் திரும்ப செலுத்தும் தேதி வரை பிற கட்டணங்கள்	மனை எண். 70ல் உள்ள நிலம் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். பழைய எஸ்.எண். 4/4, கிராமநத்தம் எஸ்.எண். 169/6. விஸ்தீரணம் 1720 சதுர அடி, பொதட்டூர்பேட்டை கிராமம், பள்ளிப்பட்டு தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். எல்லை: கிழக்கு–எஸ். எண்.169/8 மற்றும் கட்டிடம், மேற்கு–எஸ்.எண்.169/5 மற்றும் வடக்கு–சாலை, தெற்கு–விவசாய நிலம்,
2	2. மாலா B, பாபு M கடன் கணக்கு எண். LA11CLLONS000005058910	06 ஜனவரி 2024 மற்றும் 06 ஜனவரி 2024	10.01.2024 அன்று நிலுவையில் உள்ள ரூ. 147627 (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து அறுநூற்று இருபத்தேழு மட்டும்) மற்றும் 11.01.2024 முதல் வட்டி மற்றும் திரும்ப செலுத்தும் தேதி வரை பிற கட்டணங்கள்	மனை எண். 124ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். பழைய எஸ்.எண். 19/3 பகுதி, 19/4 பகுதி, புதிய எஸ்.எண். 19/48, விஸ்தீரணம் 840 சதுர அடி, கணபதி அவின்யூ லேஅவுட், காரனோடை கிராமம், பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். எல்லை: கிழக்கு–மனை எண்.123, மேற்கு–மனை எண்.125,, வடக்கு–சாலை, தெற்கு– மனை எண்.95,

இடம்: சென்னை தேதி: 20.01.2024 **(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி) இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**

ORIX

ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்

(முன்னர் ஓயிஸ் ஆட்டோ பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட்)
(ஓரிக்ஸ் ஆட்டோ இன்பிராஸ்டிரக்சர் சர்வீசஸ் லிமிடெட்டின் துணை நிறுவனம்)
பதிவு அலுவலகம்: மனை எண்.94, மாரோல் கூட்டுறவு தொழிற்பேட்டை,
அந்தேரி – குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை – 400 059
தொலைபேசி எண்: +91 22 2859 5093/6707 0100, பேக்ஸ் : +91 22 2852 8549
மின்னஞ்சல் : info@orixindia.com | www.orixindia.com | CIN : U74900MH2006PLC163937

பிற்சேர்க்கை – IV – A (விதி 8(6)ஐ பார்க்க)

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டு சொத்து (அமலாக்க) விதிகள் 2020ன் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உடன்கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை திரும்ப பெறுவதற்காக கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ‘‘எங்கு எப்படி உள்ளதோ அப்படியே’’ என்ற அடிப்படையில் **23.02.2024** அன்று பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி குறைந்தபட்ச விலை இருக்கும் மற்றும் முன்வைப்புத் தொகை (EMD) கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்கும்.

கடன்தாரர் மற்றும் உடன் கடன்தாரரின் பெயர் நிலுவை தொகை டிமாண்ட் அறிவிப்பு தேதி	சொத்து விவரம்	குறைந்தபட்ச விலை (ரூபாயில்) இஎம்டி ஏலத்தொகை அதிகரிப்பு
* M/s. ஜெனரேஷன் சிஸ்டம் * முகமது ஆலிம் * ஆயிஷா பர்வீன் 30.11.2023 அன்று வரை ரூ. 1,07,19,851.83/– டிமாண்ட் நோட்டீஸ் தேதி: 11.03.2020	ப்ளாட் விஸ்தீரணம் 975 சதுர அடி எண். எப்–1 (சொத்து பதிவேடுகளின்படி பழைய எண்.24/பி9, புதிய எண்.82/19), 4வது மாடி, சக்தி அபார்ட்மெண்ட்ஸ் என்றழைக்கப்படும் கட்டிடம் 3847 சதுர அடி நிலத்தில் உள்ள பிரிவுபடாத பங்கு நிலம் 200 சதுர அடி, டி.எஸ்.எண்.51/3, பிளாக் எண்.36, மாம்பலம் கிராமம், பழைய கதவு எண்.131/1, பின்னர் 24, தற்போது 82, கிழக்கு ஜோன்ஸ் சாலை, பழைய கதவு எண்.36/1, புதிய எண்.12, சூடியம்மன்பேட்டை தெரு, சைதாப்பேட்டை, சென்னை 600 015. நிலத்தின் எல்லைகள்: கிழக்கில்: கதவு எண்.25 – கிழக்கு ஜோன்ஸ் சாலை, மேற்கு: கதவு எண்.23–கிழக்கு ஜோன்ஸ் சாலை, வடக்கில்: சூடியம்மன்பேட்டை தெரு, தெற்கில்: கிழக்கு ஜோன்ஸ் சாலை,	குறைந்தபட்ச விலை ரூ. 55,00,000/– (ரூபாய் ஐம்பத்தைந்து லட்சம் மட்டும்) முன்வைப்புத் தொகை 10% – ரூ. 5,50,000/ (ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஏல அதிகரிப்பு தொகை ரூ. 50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)
* M/s. சென்னை மசாலா கிச்சன்ஸ் * ஷகிலா ஜெ * லெனின் பெர்னாண்டோ 30.11.2023 அன்று வரை ரூ. 2,73,75,495.62/– டிமாண்ட் நோட்டீஸ் தேதி: 16–12–2019	நில விஸ்தீரணம் 4224.75 சதுர அடி. ஓ.எஸ். எண். 204, புதிய சர்வே எண். 437/1, மேடவாக்கம் கிராமம், புதிய கதவு எண். 4/627, பழைய கதவு எண். 3/63, திருவீதி அம்மன் கோவில் தெரு, செந்தமிழ் நகர், மேடவாக்கம், சென்னை 600 100. நிலத்தின் எல்லைகள்: கிழக்கில்: அம்மன் கோவில் தெரு, மேற்கில்: பலராமன் நாயக்கர் மற்றும் மேகநாதன் நாயக்கர் சொத்து, வடக்கில்: ஐயங்கார் நிலம், தெற்கில்: சுப்ரமணியம் சொத்து,	குறைந்தபட்ச விலை ரூ. 2,54,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து நான்கு லட்சம் மட்டும்) முன்வைப்புத் தொகை 10% – ரூ. 25,40,000/ (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) ஏல அதிகரிப்பு தொகை ரூ. 50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)
* M/s ராஜ் பிரபா அசோசியேட்ஸ் * ரத்னா பாய் ஜி * கோவிந்தராஜன் 30.11.2023 அன்று வரை ரூ. 1,26,45,242.14/– டிமாண்ட் நோட்டீஸ் தேதி: 17–02–2023	ப்ளாட் எண். ஏ–2 (சொத்து வரி பதிவு எண். 5ன்படி) இரண்டாவது மாடி விஸ்தீரணம் 925 சதுர அடி. நிலபரப்பு 1800 சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 363.96 சதுர அடி. டி.எஸ். எண். 5301, பிளாக் எண். 120, தியாகராய கிராமம், பழைய கதவு எண். 14, புதிய எண். 33, நாதமுனி தெரு, தி. நகர், சென்னை 600017, மற்றும் எல்லைகள்: வடக்கு: நாதமுனி தெரு டி.எஸ். எண். 5296, தெற்கு: வெங்கடாச்சாரி மற்றும் துரைசாமி ஐயங்காரின் சொத்து (டி.எஸ்.எண். 5314), கிழக்கு: கதவு எண். 30 (டி.எஸ். எண். 5301), மேற்கு: கதவு எண். 31 நீலகண்டனுக்கு சொந்தமான பகுதி (டி.எஸ். எண். 5301/2)	குறைந்தபட்ச விலை ரூ. 91,00,000/– (ரூபாய் தொன்னூற்றுஒரு லட்சம் மட்டும்) முன்வைப்புத் தொகை 10%–ரூ. 9,10,000/– (ரூபாய் ஒன்பது லட்சத்து பத்தாயிரம் மட்டும்) ஏல அதிகரிப்பு தொகை ரூ. 50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)
* ஜே டி டயமண்ட்ஸ் * ஜீவன்தாஸ் இ * ஜெய ஜீவன்தாஸ் * சுந்தர்பால் எண்ட்லூரி 30.11.2023 அன்று வரை ரூ. 2,89,50,966.73/– டிமாண்ட் நோட்டீஸ் தேதி: 20–03–2023	ப்ளாட் எண்.ஏ–5. இரண்டாவது மாடி, பெட் போர்ட் அபார்ட்மெண்ட்ஸ் என அழைக்கப்படும் கட்டிடம், விஸ்தீரணம் 1890 சதுர அடி, நிலபரப்பு 18270 சதுர அடியில் பிரிவுபடாத பங்கு 1087 ச.அடி. ஆர்.எஸ். எண். 9/1 பிளாக் எண். 1, புரசைவாக்கம் கிராமத்தில் அமைந்துள்ளது, கதவு எண். 4/3ஏ, புதிய கதவு எண். 21, டாக்டர் அழகப்பா சாலை, புரசைவாக்கம், சென்னை–84, மற்றும் எல்லைகள்: வடக்கு: டாக்டர் அழகப்பா சாலை, தெற்கு: பம்மல் வீடு, கிழக்கு : லேடி நேப்பியர் கிராமம் Kvaim ராமநாதன், செட்டியார் குடும்பத்துக்கு சொந்தமானது மற்றும் எம்.சி.டி முத்தையா அவர்களால் தக்கவைக்கப்பட்ட சொத்து, மேற்கு: K.V.A.I.M. ராமநாதன் செட்டியாருக்கு சொந்தமான பாம் குரோவ் மற்றும் எம். சி.டி முத்தையாவுக்கு சொந்தமான பெட் போர்டு வீடு	குறைந்தபட்ச விலை ரூ. 1,65,00,000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தைந்து லட்சம் மட்டும்) முன்வைப்புத்தொகை 10%–ரூ.16,50,000/– (ரூபாய் பதினாறு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஏல அதிகரிப்பு தொகை ரூ. 50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட் அதாவது https://www.ORIXindia.com/leasing.php என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி திரு. செந்தில்குமார் முருகேசன் (தொடர்பு விவரங்கள்: +91–9578335773) அவர்களை திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை வேலை நேரத்தில் அணுகலாம்.

ஒப்பம்/–
தேதி: 20.01.2024 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்

பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: 3வது மாடி, பஞ்சீல் டெக் பார்க், விமான் நகர், புனே– 411 014 மகாராஷ்டிரா.
கிளை அலுவலகம்: 8வது தளம், 177, டெல்டா விங்,ரஹேஜா டவர்ஸ், அண்ணா சாலை, சென்னை 600002
அங்கீகரிக்கப்பட்ட அலுவலக விவரங்கள்: வரதராஜ் M, மின்னஞ்சல் முகவரி : Varadaraj.m@bajajfinservin,
மொபைல் எண். 9940286237, 8669189048 & 9586006406

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் கீழ் (‘சட்டம்’) கீழ் அசையா சொத்துக்களை விற்பனைக்கான இ–ஏல பொது அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/உடன் கடன்தாரர் பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்('BFL')க்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தை அடமானம் வைத்துள்ளார் என்று இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. SARFAESI சட்டம் 2002 மற்றும் அங்குள்ள விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் மேற்கூறிய அசையா சொத்து ('பாதுகாக்கப்பட்ட சொத்து/சொத்து') கையகப்படுத்தப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி BFLக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை, பொருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை பெறுவதற்காக பாதுகாக்கப்பட்ட சொத்து பொது ஏலத்தின் மூலம் விற்கப்படும். கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், விதி எண் 8 மற்றும் 9ன் கீழ் (இனிமேல் விதிகள் என குறிப்பிடப்படுகிறது) பாதுகாக்கப்பட்ட சொத்து விற்பனை மற்றும் "எங்கே இருக்கிறதோ அதுபோல்", "எதுவாக இருந்தாலும்", "எப்படி இருந்தாலும்" மற்றும் "ஆதாரம் இல்லாத" அடிப்படையில்'' 06/02/2024 அன்று ஏலம் நடைபெறும். மற்றும் அதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

கடன் கணக்கு விவரங்கள்/ கடன்தாரர்/கள் & உத்தரவாததாரர்கள் பெயர் மற்றும் முகவரி	1. மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம் 2. EMDஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 3. சொத்தை பார்வையிடுவதற்கான தேதி மற்றும் நேரம் 4. சொத்து குறித்த விவரம்	★ ரிசர்வ் விலை ★ சொத்துக்கான EMD ★ ஏல அதிகரிப்பு
LAN. H405FBH0370525 and H405FBT0375913 **1. வைகுண்டம் வைகுண்டம் வெங்கடேசன் (கடன்தாரர்)** முகவரி : பிளாட் எண்.1101, ஸ்ரீ பகவான் அபார்ட்மெண்ட், மனை எண்.72, செக்டார் 44ஏ, நவி மும்பை, மகாராஷ்டிரா 400 706 மொத்த நிலுவைத் தொகை : ரூ.1,09,90,211/- (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது லட்சத்து தொன்னூறாயிரத்து இருநூற்று பதினொன்று மட்டும்) மற்றும் 16.01.2024 முதல் சேர்ந்துள்ள கட்டணம் மற்றும் எதிர்கால வட்டி.	**1. இ– ஏலத் தேதி** 06.02.2024 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை வரம்பற்ற 5 நிமிட நீட்டிப்புடன், **2. கேஒய்சி உடன் EMDஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி** 05.02.2024 அன்று மாலை 5.0 மணி வரை (IST) **3. சொத்தை பார்வையிடுவதற்கான தேதி** 22.01.2023 முதல் 02.02.2024 வரை காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை (IST) **4. சொத்து குறித்த விவரம்:** எண்.3இ - 5094, 9வது தளம், பிளாக்–5, சுப மெரிட்டா, ஓஎஸ் எண்.29/1ஏ2பி பகுதி, என்.எஸ். எண்.29/8 பகுதி மற்றும் மற்றவை, வண்டலூர், கேளம்பாக்கம் சாலை, புதுப்பாக்கம் கேளம்பாக்கம், தமிழ்நாடு – 603 103, எல்லைகள்; கிழக்கு : காலி நிலம், மேற்கு : காலி நிலம், வடக்கு: சாலை, தெற்கு : காலி நிலம்.	**ரிசர்வ் விலை :** ரூ.72,20,000/- (ரூபாய் எழுத்திரண்டு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) EMD : ரூ.7,22,000/- (ரூபாய் ஏழு லட்சத்து இருபத்துஇரண்டாயிரம் மட்டும், ரிசர்வ் விலையில் 10%) **ஏல அதிகரிப்பு** ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் அதன் மடங்குகளில்

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:

- * பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு தற்போதைய அல்லது எதிர்கால வில்லங்கங்களை அறிந்தோ அறியாமலோ "எங்கே இருக்கிறதோ அதுபோல்", "எதுவாக இருந்தாலும்", "எப்படி இருந்தாலும்" மற்றும் "ஆதாரம் இல்லாத" அடிப்படையில் பொது ஏலம் நடத்தப்படுகிறது.
- * குறைந்தபட்ச விலைக்கு கீழே பாதுகாக்கப்பட்ட சொத்து விற்கப்படாது.
- * ஏல விற்பனை இணைய ஏல போர்ட்டல் மூலம் ஆன்லைனில் இருக்கும்.
- * இ–ஏலம் https://bankauctions.inல் 06 பிப்ரவரி 2024 அன்று காலை 11:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை ஒவ்வொன்றும் 5 நிமிடங்களுக்கு வரம்பற்ற நீட்டிப்புடன் நடைபெறும்.
- * விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு நிறுவனத்தின் இணையதள URL https://cms-assets.bajajfinserv.in/is/content/bajajfinance/auction-website-notice-vaikuntam-vaikuntam-venkatesanpdf?scl=l&fmt=pdfஐப் பார்க்கவும் அல்லது எந்தவொரு தெளிவுபடுத்தலுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தேதி: 20.01.2024 இடம்: சென்னை ஒப்பம்/– (வரதராஜ் M), அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்

---

kotak
Kotak Mahindra Bank

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051
கிளை அலுவலகம்: எண். 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை–600 006.

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. திருமதி தேவி மற்றும் நடராஜன் டி ஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண் 4030HL16517988 & 4030HL18597065ன் கீழ் 17.01.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.1,01,69,568.59/– (ரூபாய் ஒரு கோடியே ஒரு லட்சத்து அறுபத்துஒன்பதாயிரத்து ஐநூற்றுஅறுபத்தெட்டு மற்றும் ஐம்பத்தொன்பது பைசா மட்டும்) மற்றும் 18.01.2024 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ‘‘எங்கு எப்படி உள்ளதோ அப்படியே’’ என்ற அடிப்படையில் 28.02.2024 பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.38,00,000/– (ரூபாய் முப்பத்தெட்டு லட்சம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.3,80,000/– (ரூபாய் மூன்று லட்சத்து எண்பதாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 27.02.2024 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்து விவரம்: 1: ப்ளாட் எண். E என்ற சொத்து மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். அபார்ட்மெண்டின் முதல் மாடி. ராஜலட்சுமி அபார்ட்மெண்ட்ஸ் என அழைக்கப்படுகிறது. விஸ்தீரணம் 815 சதுர அடி (பொதுவான பகுதி உட்பட), இப்போது பழைய கதவு எண் 32, புதிய கதவு எண் 29 "ராஜலட்சுமி அபார்ட்மெண்ட்ஸ்", கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 600033 மற்றும் 2600 சதுர அடியில் நிலத்தின் பிரிக்கப்படாத பங்கு 519 சதுர அடி. டி.எஸ். எண். 17, பிளாக் எண். 2, சைதாப்பேட்டை கிராமம், மாம்பலம் கிண்டி தாலுக்கா, சென்னை மாவட்டம், தெற்கு சென்னை பதிவு மாவட்டம் மற்றும் சைதாப்பேட்டை இணை 1 துணை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது. எல்லைகள்: வடக்கு: ராமசாமி தோட்டம், கிழக்கு: அண்ணாமலை வீடு, மேற்கு: ருத்ரகோடி வீடு, தெற்கு: கிருஷணப்ப நாயக்கன் தெரு.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600), திரு. விஜய் குமார் மேனன் (+91 9940572248), திரு. வேல்முருகன் கதிர்வேல் (+91 9884718338), திரு. சூரியா பெரியசாமி (+91 9600222111) & திரு. ராஜேந்திர தஹியா (+91 8448264515) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://www.kotak.com/en/bank–auctions.html and/or on https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
தேதி : 20–01–2024 **கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: தனி கார்ப்பரேட் பார்க், 5–வது தளம், 158, சி.எஸ்.டி. ரோடு, கலினா, சாந்தாகுரூஸ் (இ), மும்பை–400 098. Tel: 022–6741 2314, Fax: 022- 6741 2313
CIN: U67190MH2007PTC168303 Email: info@phoenixarc.co.in Website: www.phoenixarc.co.in

ஆன்லைன் மூலம் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு. டாடா கேபிடல் பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் (டிசிஎப்எஸ்எல்) மூலம் அதன் சார்பாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் 24.02.2023 அன்று போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டின் (போனிக்ஸ் டிரஸ்ட் எப்ஒய் 19–5ன் திட்டம் என் டிரஸ்டியாக செயல்படுகிறார்) (பிஏஆர்சி) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஈடுபெற்ற கடன்தாரரான ஜெயகுமார் ஆர்.பி.கே மற்றும் திருமதி சுஜா ஜெ ஆகியோர் பிஏஆர்சி–க்கு, கடன் கணக்கு எண் 3122017–ன் கீழ் 31.12.2023 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.1,27,51,360/– (ரூபாய் கோடியே இருபத்தேழு லட்சத்து ஐம்பத்தோராயிரத்து முன்னூற்று அறுபது மட்டும்) மற்றும் 31.12.2023 அன்று முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் மேலும் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ‘‘எங்கு எப்படி உள்ளதோ அப்படியே’’ என்ற அடிப்படையில் 08.02.2024 அன்று பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.1,26,00,000/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்தாறு லட்சம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.12,60,000/– (ரூபாய் பன்னிரெண்டு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 07.02.2024 அன்று 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

மேலும் குறிப்பாக விவரிக்கப்பட்டவை: ஒரு குடியிருப்பு ப்ளாட், ப்ளாட் எண்.ஏ–1 கட்டிடத்தின் முதல் தளம் "சரஸ்வதி அபார்ட்மென்ட்" என அறியப்படுகிறது, பிளிந்த் பகுதி 710 சதுர அடி ப்ளாட்டில் 1420 சதுர அடியில் பிரிவுபடாத பங்கு மற்றும் 878 சதுர அடி நிலத்தில் பிரிவுபடாத பங்கு 439 சதுர அடி நிலம் மற்றும் திறந்த வாகன நிறுத்துமிடம் 150 சதுர அடி நிலம் (15 அடி X 10 அடி) தரை தளம், 2 கிரவுண்ட் மற்றும் 1050 சதுர அடியில் (5850 சதுர அடி) நிலம் மனை எண். 3798, கதவு எண். 47/3, ஆர்1, ஆர்–பிளாக், 6வது அவென்யூ, அண்ணா நகர், சென்னை 600 040 மற்றும் டி.எஸ்.எண்.228ல் உள்ளடங்கியது, பிளாக் எண். 2, முல்லம் கிராமம், எழும்பூர்–நுங்கம்பாக்கம் தாலுக்கா, சென்னை மாவட்டம். எல்லைகள் வடக்கு: 70 அடி சாலை (14 அடி வடகிழக்கில் ஸ்ப்ளே), தெற்கு: மனை எண்.3799, கிழக்கு: 48 அடி சாலை, மேற்கு: மனை எண்.3820 மற்றும் 3821

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி இ–ஏலத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து திரு. விஷால் ஆதிஷேசன் (+91 9941016600), திரு. சூரிய நாராயணன் பி (+91 9600222111), திரு. விஜய் குமார் மேனன் (+91 9940572248), திரு. வேல்முருகன் (+91 9884718338) & திரு. ராஜேந்தர் தஹியா (+91 8448264515) ஆகியோரை ஏலதாரர் தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளம் www.phoenixarc.co.inல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://phoenixarc.co.in?p=4749 and /or on https://bankauctions.inல் பார்வையிடலாம்.

இடம்: சென்னை **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டுக்காக**
தேதி: 20.01.2024 **(போனிக்ஸ் டிரஸ்ட் எப்ஒய் 19–5 திட்டம்–என் டிரஸ்டியாக செயல்படுகிறார்)**